4th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The concerned authorities had strong reasons to believe that the City Students' Association of which some students became organisers, had a definite political complexion. Therefore letters were addressed to the parents of those students by the authorities of the respective institutions that they should not take part in political activities.

* 45 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether students are prohibited from being members of any organization or association connected with cultural and educational interest; and

(*b*) if so, the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இது போன்று அரசியலில் அக்கறை இருக்கிறது என்று காரணம் காட்டி பெற்றோர்களுக்குக் கடிதம் அனுப்பும் காரணமாக, குடும்பத்திலேயும் கூட பெரிய ரகளையை உண்டாக்கக் கூடிய நெருக்கடியை உண்டாக்குகிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : குடும்ப ரகளை ஏற்படுவது ஒன்றும் கிடையாது. தாய்-தகப்பன்மார்கள் பணம் அனுப்பி தங்கள் குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டுமென்று வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கும்போது, அவர்கள் வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அதைப் பற்றி அவர்கள் கவனத்திற்கும் கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியம்.

SRI A. A. RASHEED : Is it not a fact that all political parties are now agreed that students should not be involved in politics?

THE HON. SRI C. SUBRAMANIAM : Since that decision has been taken, this question is purely academic. We are now arriving at definite conclusions as to the various political parties engaged in this work and as to how far students can participate in politics.

SRI A. GOVINDASAMI : மாணவர் காங்கிரஸ் இயக்கத்திலும் மாணவர்கள் சேரக் கூடாது என்று பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசியலில் ஈடுபடும்போது அதைத் தடுக்க எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

SRI M. KALYANASUNDARAM : வேறு என்னென்ன மாணவர்கள் ஸ்தாபனங்கள் அரசியலில் ஈடுபாடுகொண்டிருக்கின்றனர் ? மற்ற ஸ்தாபனங்களின் மீதும் இம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON SRI C. SUBRAMANIAM : ஆம், திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் அதைப் போன்ற ஸ்தாபனங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மீதும் இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸாக இருந்தாலும், அரசியலில் ஈடுபட்டால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதனால்தான் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இனிமேல் இந்த மாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இருக்காது. எல்லோராலும் சேர்ந்து அதற்கு முயற்சியெடுக்கப்பட்டு வருகிறது.